தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. 12 / 2025

LW 23 PW : 21

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. G. புனிதா, நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யப்பன் | த / பெ. | : | மணி |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| தொழில் | : | | வயது | : | |

LW : 23 PW :28

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

06.08.2025

**முதல்விசாரணை**

நான் தற்போது நன்னிலம் வட்டார கூட்டுறவு சார்பதிவாளர் கள அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 30.06.2018 முதல் 2022 ஆம் வருடம் வரை வலங்கைமான் வட்டாரத்தில் கூட்டுறவு சார்பதிவாளர் கள அலுவலராக பணிபுரிந்து வந்தேன்.

2) திருவாரூர் சரக துணை பதிவாளர் அவர்களின் உத்தரவுப்படி Z 764 வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தில் நடைபெற்ற முறைகேடுகள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள எனக்கு செயல்முறை ஆணை எண் ந.க.2342/2018 நாள் 10.05.2019 நா.வி. 1 ன்படி உத்தரவிடப்பட்டிருந்தது. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான் அந்த உத்தரவு அசா 1 ன் மூலமாக அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3) அந்த செயல்முறை உத்தரவில் 3 மாதங்களுக்குள் முடிக்க உத்தரவு போடப்பட்டிருந்தது. அந்த 3 மாதங்களுக்குள் என்னால் முடிக்கமுடியவில்லை என்பதால் காலஅவகாசம் கேட்டு துணை பதிவாளரிடம் 03.08.2019 ல் கடிதம் அனுப்பினேன். காலஅவகாச கடிதம் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான். தற்போது என்னிடம் காட்டபடும் வரிசை எண் 39 காலநீடிப்பு கோரும் கடிதம் 1 முதல் 43 பக்கங்கள் உடையது. அது **அதசாஆ 68** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) அதன் அடிப்படையில் துணை பதிவாளர் காலநீடிப்பு செய்து எனக்கு உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவு தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த உத்தரவு அசா 1ன் மூலமாக அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) 3 மாதங்கள் கழித்து பிரிவு 81 விசாரணை முடித்து 18.11.2019 ல் திருவாரூர் துணை பதிவாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வரிசை எண் 37 பிரிவு 81 விசாரணை அறிக்கை 40 பக்கங்கள் உடையது அது **அதசாஆ 69** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) அந்த விசாரணையில் ஆஜர் எதிரி கவிதா வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் மற்றும் அலுவலர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்தபோது கையாடல் செய்ததாக தெரியவந்தது. இனங்கள் 2 ஆக பிரிக்கப்பட்டு முதல் இனத்தில் 15 குற்றச்சாட்டுக்களும், 2 வது இனத்தில் 3 குற்றச்சாட்டுக்களும் எனது அறிக்கையாக தாக்கல் செய்தேன்.

**இனம் I-1**

7) கடன் எண் L 579 க்கு 09.01.2013 ல் வரப்பெற்ற தொகை ரூ.63,666/- ஐ சங்க கணக்குகளில் வரவு வைக்காமல் கையாடல் செய்தது ரூபாய் 63,666/-. வலங்கைமான் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணய சங்கத்தில் உறுப்பினர் விஜயகுமாரி உறுப்பினர் எண் 544 ல் வரவு வைக்கப்படாமல் உள்ளது. தற்போது

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வரிசை எண் 17 ல் கடன்பேரேடு எண் 1305 – 1690 பக்கம் 77, 78 அது அதசாஆ 70 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வரிசை எண் 18 ல் கடன்பேரேடு எண் 1533 – 1721 பக்கம் 12 ல் விஜயகுமாரி அவர்களின் கடன்பேரேடு கணக்கில் வரவுவைக்கப்படாமல் உள்ளது. அது அதசாஆ 71 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9)மேற்படி விஜயகுமாரி கடன்பேரேடில் எதிரி வரவுவைக்கப்படாமல் ரூ.63,666/- கையாடல் செய்துள்ளார். விஜயகுமாரி அவர்களை எனது விசாரணைக்கு ஆஜர்படுத்தி அவரை விசாரித்தபோது விஜயகுமாரி அவர்கள் மேற்படி சங்கத்தில் ரூ.2 லட்சம் கடன்வாங்கியிருந்தேன் என்றும் அதனை கட்டிக்கொண்டே வந்தேன் என்றும் கணக்கை முடிக்க கேட்டபோது நிலுவைதொகை ரூ.63,666/- ரூபாய் பாக்கியுள்ளது என கூறியவுடன் அந்த தொகையை ஆஜர் எதிரி பெற்றுக்கொண்டு வரவுவைக்காமல் இருந்துள்ளார். அந்த இனம் தொடர்பாக எதிரி கவிதாவிடம் கேட்டபோது நான் வரவுவைக்கவில்லை என்றும் அந்த பணத்தை செலவுசெய்துவிட்டதாகவும் என்னிடம் ஒப்புக்கொண்டு திரும்ப கட்டிவிடுவதாக கூறினார்.

**இனம் I – 2**

10) கடன் உறுப்பினர் பெயர் அருண் உறுப்பினர் எண் 642 இவர் 2 லட்சம் கடன் பெற்றுள்ளார் அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 77 ஆயிரம் நிலுவையில் இருந்தது. அவர் ஆசிரியர் என்பதால் தூத்துக்குடி மாவட்டத்திற்கு பணிமாறுதல் செல்லவேண்டியிருந்ததால் கடன் நிலுவையில்லா சான்று கேட்டுள்ளார். அதற்கு அவருடைய பங்கு தொகை 20 ஆயிரம் என்றும் சிக்கன சேமிப்பு 9,473 ரூபாய் உள்ளது என்றும் அந்த பணத்தை உளவடை செய்தால் மீதம் 52,900 ரூபாய் செலுத்தவேண்டும் என எதிரி கவிதா கூறியதால் அந்த பணத்தை எதிரியிடம் கொடுத்துவிட்டு கடன்நிலுவையில்லா சான்றினை அருண் பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால் கவிதா அந்த பணம் ரூ.52,900/ ஐ சங்க பணத்தில் வரவு வைக்காமல் அந்த

பணத்தை தான் செலவு செய்துவிட்டார். எனது விசாரணையின்போது மேற்குறிப்பிட்ட தொகைக்கு அசல் வட்டி செலுத்திவிடுவதாக எதிரி கவிதா சொன்னார். வரிசை எண் 18 ல் கடன்பேரேடு எண் 1533 – 1721 பக்கம் 138 ல் அருண்அவர்களின் கடன்பேரேடு கணக்கில் வரவுவைக்கப்படாமல் உள்ளது. அது **அதசாஆ 72** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இனம் I – 3**

11) கடன் உறுப்பினர் பெயர் அனிதா உறுப்பினர் எண் 634 கடன் எண் L088 இவர் 2 லட்சம் கடன் பெற்றுள்ளார் அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 80 ஆயிரம் நிலுவையில் இருந்தது. அந்த பணத்தை ஒரு தேதியில் 50 ஆயிரமும் மற்றொரு தேதியில் 30 ஆயிரமும் சேர்த்து ரூபாய் 80 ஆயிரத்தை திரும்ப செலுத்தியுள்ளார். அந்த பணத்தை வரவுவைக்காமல் எதிரி கவிதா கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். வரிசை எண் 18 ல் கடன்பேரேடு எண் 1533 – 1721 பக்கம் 148 ல் அனிதா கடன்பேரேடு கணக்கில் வரவுவைக்கப்படாமல் உள்ளது. அது அதசாஆ 50 ஆவது ஆவணமாக அசா 15 அனிதா மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 19 கடன்பேரேடு எண் 1579 – 1882 பக்கம் 56 ல் பணம் வரவு வைக்கப்படாமல் உள்ளது. அது **அதசாஆ 73** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இனம் I – 4**

12) கடன் உறுப்பினர் பெயர் கலா உறுப்பினர் எண் 448 கடன் எண் L756 இவர் 5 லட்சம் கடன் பெற்றுள்ளார் அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 3,49,964 நிலுவையில் இருந்தது. 06.02.2016 லிருந்து ஜூலை 2017 வரை பல்வேறு தேதிகளில் ரூபாய் 1 லட்சத்து 74 ஆயிரம் பணத்தை பெற்றுக்கொண்டு அந்த பணத்தை வரவுவைக்காமல் எதிரி கவிதா கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். வரிசை எண் 21 ல் கடன்பேரேடு

எண் 1722 – 1823 பக்கம் 68, 69 ல் கலா கடன்பேரேடு கணக்கில் வரவுவைக்கப்படாமல் உள்ளது. அது **அதசாஆ 74** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 19 கடன் பேரேடு எண் 1579 – 1852 ல் பக்கம் 73 கலா கணக்கில் வரவு வைக்கப்படாமல் உள்ளது. அது **அதசாஆ 75** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இனம் I – 5**

13) கடன் உறுப்பினர் பெயர் ராஜகுமாரி உறுப்பினர் எண் 641 கடன் எண் L166 இவர் 2 லட்சம் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 18,800 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். ஆனால் ஆஜர் எதிரி கவிதா பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். வரிசை எண் 18 ல் கடன்பேரேடு எண் 1833 – 1721 பக்கம் 229 ல் ராஜகுமாரி பெயரில் உள்ள கடன்பேரேடு அசா 5 ராஜகுமாரி மூலமாக அதசாஆ 11 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 19 ல் பக்கம் எண் 28 பயனாளர் அசா 5 ராஜகுமாரி அவர்கள் மூலமாக அதசாஆ 12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I – 6**

14) கடன் உறுப்பினர் பெயர் மாரீஸ்வரி உறுப்பினர் எண் 652 கடன் எண் L205 இவர் 4,50,000/- ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 4,16,250 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். ஆனால் ஆஜர் எதிரி பல்வேறு தேதிகளில் நேரடியாக கையில் பெற்றுக்கொண்டு எதிரி கவிதாவின் வங்கிகணக்குள்ள சிட்டியூனியன் பேங்க் கணக்கு எண் 1996642 மற்றும் இந்தியன் ஒவர்சீஸ் வங்கி கணக்கு எண் 4078 ஆகிய வங்கி கணக்குகளில் வெவ்வேறு தேதிகளில் செலுத்தப்பட்டுள்ளது. மொத்த தொகை ரூ.2,78,000/- பணத்தை வரவு

வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். வரிசை எண் 19 ல் கடன்பேரேடு எண் 1579 – 1822 பக்கம் 40 ல் மாரீஸ்வரி பெயரில் உள்ள கடன்பேரேடு அது அதசாஆ 76 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 18 ல் பக்கம் எண் 304 பயனாளர் அசா 6 மாரீஸ்வரி அவர்கள் மூலமாக அதசாஆ 13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியானவர் சங்க தலைவர் என்ற இடத்தில் for என குறிப்பிட்டு தானே கையொப்பமிட்டுள்ளார். 28.08.2014 ல் கடன்நிலுவையில்லா சான்றிதழும் வழங்கியுள்ளார். அது அதசாஆ 15 ஆக அசா 6 மாரீஸ்வரி மூலமாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I – 7**

15) கடன் உறுப்பினர் பெயர் ராம்குமார் உறுப்பினர் எண் 680 கடன் எண் L730 இவர் 2 லட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 1,15,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 18 ல் பக்கம் எண் 200 பயனாளர் அசா 7 ராம்குமார் அவர்கள் மூலமாக அதசாஆ 21 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I – 8**

16) கடன் உறுப்பினர் பெயர் திலகவதி உறுப்பினர் எண் 375 கடன் எண் L613 இவர் 3 லட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 1,10,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு

என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 18 ல் பக்கம் எண் 33 பயனாளர் அசா 3 திலகவதி அவர்கள் மூலமாக அதசாஆ 5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியானவர் சங்க தலைவர் என்ற இடத்தில் for என குறிப்பிட்டு தானே கையொப்பமிட்டுள்ளார். 26.05.2014 ல் கடன்நிலுவையில்லா சான்றிதழும் வழங்கியுள்ளார். அது அதசாஆ 6 ஆக அசா 3 திலகவதி மூலமாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. துர்க்கா, விஜயபாலன், விஜயபூபாலன், திலகவதி ஆகிய பயனாளர்களுக்கு கொடுக்கவேண்டிய பாக்கி தொகையை எதிரி தாமே செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார். அது அசா 9 விஜயபூபாலன் மூலமாக அதசாஆ 22 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I-9**

17) கடன் உறுப்பினர் பெயர் நேசப்பிரியா உறுப்பினர் எண் 733 கடன் எண் L738 இவர் 3 லட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 2,67,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 21 ல் பக்கம் எண் 33 பயனாளர் அசா 4 நேசப்பிரியா அவர்கள் மூலமாக அதசாஆ 8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியானவர் சங்க தலைவர் என்ற இடத்தில் for என குறிப்பிட்டு தானே கையொப்பமிட்டுள்ளார். 14.07.2014 ல் கடன்நிலுவையில்லா சான்றிதழும் வழங்கியுள்ளார். அது அசா 4 மூலமாக அதசாஆ 9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I-10**

18) கடன் உறுப்பினர் பெயர் ராஜேந்திரன் உறுப்பினர் எண் 703 கடன் எண் L770 இவர் 4,60,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப

செலுத்தியது போக மீதம் ரூ. 2,60,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 21 ல் பக்கம் எண் 96 பயனாளர் ராஜேந்திரன் கடன் பேரேடு அது அதசாஆ 77 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இனம் I – 11**

19) கடன் உறுப்பினர் பெயர் சீனிவாசன் உறுப்பினர் எண் 689 கடன் எண் L150 இவர் 3,00,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 1,66,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்துள்ளார். அதில் 1,16,000 ரூபாய் ஆஜர் எதிரி வரவு வைத்துவிட்டு பாக்கி ரூபாய் 50 ஆயிரத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 18 ல் பக்கம் எண் 198 பயனாளர் அசா 7 சீனிவாசன் மூலமாக அதசாஆ 18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 18 ல் பக்கம் எண் 199 ல் அசா 8 சீனிவாசன் கணக்கில் ரூ.1,16,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. அது அதசாஆ 78 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியானவர் சங்க தலைவர் என்ற இடத்தில் for என குறிப்பிட்டு தானே கையொப்பமிட்டுள்ளார். 31.10.2014 ல் கடன்நிலுவையில்லா சான்றிதழும் வழங்கியுள்ளார். அது அசா 7 மூலமாக அதசாஆ 16 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I – 12**

20) கடன் உறுப்பினர் பெயர் விஜயபூபாலன் உறுப்பினர் எண் 736 கடன் எண் L790 இவர் 2,50,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப

செலுத்தியது போக மீதம் ரூ. 2,46,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கேட்டபோது அவர் பங்குதொகையையும், சிக்கன சேமிப்பையும் நேர் செய்தது போக மீதம் 2 லட்சத்தை திரும்ப செலுத்தவேண்டும் என எதிரி கூறியுள்ளார். அதன்பேரில் விஜயபூபாலன் எதிரியிடம் ரூபாய் 2 லட்சம் கொடுத்துள்ளார் எதிரி அந்த பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 21 ல் பக்கம் எண் 130 பயனாளர் அசா 9 விஜயபூபாலன் மூலமாக அதசாஆ 25 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I – 13**

21) கடன் உறுப்பினர் பெயர் ஜெயக்கொடி உறுப்பினர் எண் 435 கடன் எண் L819 இவர் 3 லட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 1,21,000 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கேட்டபோது எதிரி செலுத்திவிடுவதாக கூறினார்.

22) எதிரி அந்த பணத்தை வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 21 ல் பக்கம் எண் 270 பயனாளர் அசா 14 ஜெயக்கொடி மூலமாக அதசாஆ 43 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஜெயக்கொடி அவர்கள் இவ்வாறு ரூ.67,400 ஐ 02.12.2014 ஆம் தேதி எதிரியின் இந்தியன் ஓவர் சீஸ் வங்கி கணக்கு எண் 222005042 மூலமாகவும் பணம் செலுத்தியுள்ளார். அது அசா 14 மூலமாக அதசாஆ 41 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**இனம் I – 14**

23) கடன் உறுப்பினர் பெயர் ஜாய்ஸ்ராணி உறுப்பினர் எண் 682 கடன் எண் L803 இவர் 7 லட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளார். அவர் கடன் திரும்ப செலுத்தியது போக மீதம் ரூ. 5,82,676 ரூபாய் பணத்தை கட்டச்சொல்லி ஆஜர் எதிரியிடம் கொடுத்ததை எதிரி கேட்டபோது எதிரி செலுத்திவிடுவதாக கூறி வெவ்வேறு தேதிகளில் கவிதா கணக்கில் (கணக்கு எண் 00000202835640) ஸ்டேட்பாங்க் ஆப் இந்தியா, வலங்கைமான் கிளையில் ரூ. 1,14,000 செலுத்தியுள்ளார். அது அசா 20 வினோத்பாபு என்பவர் மூலமாக அதசாஆ 67 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பாக்கி தொகை ரூ.1,11,000 ஐ எதிரி அந்த பணத்தை கடன்பேரேட்டில் வரவு வைக்காமல் கையாடல் செய்துள்ளார். எனது விசாரணையில் அந்த பணத்திற்கு தான் பொறுப்பு என்றும் தான் திரும்ப செலுத்திவிடுவதாகவும் என்னிடம் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 21 ல் பக்கம் எண் 226, 227 பயனாளர் ஜாய்ஸ்ராணி கணக்கு புத்தகத்தில் வரவு வைக்கப்படாமல் உள்ளது அது **அதசாஆ 79** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 19 ல் பக்கம் எண் 100 பயனாளர் ஜாய்ஸ்ராணி கணக்கு புத்தகத்தில் வரவு வைக்கப்படாமல் உள்ளது அது **அதசாஆ 80** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>இனம் I – 15</u>**

24) கடன் உறுப்பினர் பெயர் அருண்மாறன் உறுப்பினர் எண் 747 கடன் எண் L775 இவர் 1,30,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். அருண்மாறன் கடனை முடிப்பதற்கு ஆஜர் எதிரியிடம் கேட்டபோது ரூ 13,000 ம் பங்கு தொகை சிக்கன சேமிப்பு 3604 ரூபாய் உளவடைசெய்தாலும் ரூ.47,253 பணம் கட்டினால் கடன் முடிந்துவிடும் என எதிரி கூறியதால் அந்த பணத்தை அருண்மாறன் எதிரியிடம் கொடுத்த ரூ.47,253 ஐ கடன்பேரேட்டில் வரவு வைக்காமல் இருந்துவிட்டார். எனது விசாரணையின்போது மேற்குறிப்பிட்ட பணத்தை பற்றி கேட்டபோது தான் திரும்ப செலுத்திவிடுவதாக கூறினார். தற்போது

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு வரிசை எண் 19 ல் பக்கம் எண் 84 பயனாளர் அருண்மாறன் கணக்கு புத்தகத்தில் வரவு வைக்கப்படாமல் உள்ளது அது **அதசாஆ 81** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியானவர் சங்க தலைவர் என்ற இடத்தில் for என குறிப்பிட்டு தானே கையொப்பமிட்டுள்ளார். 05.08.2017 ல் கடன்நிலுவையில்லா சான்றிதழும் வழங்கியுள்ளார். அது அசா 12 அருண்மாறன் மூலமாக அதசாஆ 32 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>இனம் II - 1</u>**

25) கடன் உறுப்பினர் பெயர் முருகானந்தம் உறுப்பினர் எண் 131 கடன் எண் L210 இவர் 3,30,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். வாங்கிய கடனை திரும்ப செலுத்துவதற்காக முருகானந்தம் ஆஜர் எதிரியிடம் கேட்டபோது ஆஜர் எதிரி என்னிடம் பணத்தை கொடுங்கள் நான் கட்டிவிடுகிறேன் என கேட்டபோது முருகானந்தம் ரூ 32,100 ஐ வரவு வைக்க கொடுத்துள்ளார். அந்த பணத்தை ஆஜர் எதிரி 24.09.2013 ஆம் தேதி பெற்றுக்கொண்டு ரசீதும் கையெழுத்தோடு வழங்கியுள்ளார். அது அசா 14 ன் மூலமாக அதசாஆ 53 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை எதிரி காலதாமதமாக 22.11.2013 ஆம் தேதி அன்றுதான் பயனாளர் முருகானந்தம் கணக்கில் வரவு வைத்துள்ளார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 6 துணை தினக்குறிப்பேடு 2013-2014 பக்கம் எண் 78 ல் காலதாமதமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 82** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>இனம் II - 2</u>**

26) கடன் உறுப்பினர் பெயர் அனிதா உறுப்பினர் எண் 634 கடன் எண் L088 இவர் 2,00,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். வாங்கிய கடனை அனிதா திரும்ப செலுத்துவதற்காக ஆஜர் எதிரியிடம் கேட்டபோது ஆஜர் எதிரி என்னிடம் பணத்தை கொடுங்கள் நான் கட்டிவிடுகிறேன் என கேட்டபோது அனிதா ரூ 20,000 ஐ வரவு வைக்க கொடுத்துள்ளார். அந்த பணத்தை ஆஜர் எதிரி 15.10.2013 ஆம் தேதி பெற்றுக்கொண்டு ரசீதும் கையெழுத்தோடு

வழங்கியுள்ளார். அது அசா 15 ன் மூலமாக அதசாஆ 45 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை எதிரி காலதாமதமாக 31.01.2014 ஆம் தேதி அன்று தான் பயனாளர் அனிதா கணக்கில் வரவு வைத்துள்ளார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 6 துணை தினக்குறிப்பேடு 2013-2014 பக்கம் எண் 101 ல் காலதாமதமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 83** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>இனம் II – 3</u>**

27) கடன் உறுப்பினர் பெயர் கலா உறுப்பினர் எண் 448 கடன் எண் L756 இவர் 5,00,000 ரூபாய் கடன் பெற்றுள்ளார். வாங்கிய கடனை கலா திரும்ப செலுத்துவதற்காக ஆஜர் எதிரியிடம் கேட்டபோது ஆஜர் எதிரி என்னிடம் பணத்தை கொடுங்கள் நான் கட்டிவிடுகிறேன் என கேட்டபோது கலா ரூ 24,808 ஐ வரவு வைக்க கொடுத்துள்ளார். அந்த பணத்தை ஆஜர் எதிரி வெவ்வேறு தேதிகளில் பெற்றுக்கொண்டு ரசீதும் கையெழுத்தோடு வழங்கியுள்ளார். அது அசா 18 ன் மூலமாக அதசாஆ 58, 59, 60, 61, 62, 63, 64, 65 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை 16.10.2015 ல் கொடுத்த ரூபாய் 24,808 ஐ ஆம் தேதி பயனாளர் கலா கணக்கில் எதிரி காலதாமதமாக வரவு வைத்துள்ளார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 8 துணை தினக்குறிப்பேடு 2015-2016 பக்கம் எண் 138 ல் காலதாமதமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 84** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.07.2016 ல் கொடுத்த ரூபாய் 12,400 ஐ ஆம் தேதி பயனாளர் கலா கணக்கில் எதிரி காலதாமதமாக 19.09.2016 ல் வரவு வைத்துள்ளார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 9 துணை தினக்குறிப்பேடு 2016-2017 பக்கம் எண் 55 ல் காலதாமதமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 85** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.08.2016 ல் கொடுத்த ரூபாய் 12,400 ஐ ஆம் தேதி பயனாளர் கலா கணக்கில் எதிரி காலதாமதமாக 20.09.2016 ல் வரவு வைத்துள்ளார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 9 துணை தினக்குறிப்பேடு 2016-2017

பக்கம் எண் 56 ல் காலதாமதமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 86** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.05.2017 ல் கொடுத்த ரூபாய் 24,800 ஐ ஆம் தேதி பயனாளர் கலா கணக்கில் எதிரி காலதாமதமாக 01.07.2017 ல் வரவு வைத்துள்ளார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 10 துணை தினக்குறிப்பேடு 2017-2018 பக்கம் எண் 31 ல் காலதாமதமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 87** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

28) இனம் 1 மற்றும் 2 ன் முறைகேடான தொகையின் மொத்த கூடுதல் ரூ.20,74,827/- ஐ தனது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்திக்கொண்டு எதிரி கையாடல் செய்துள்ளார். எனது விசாரணை அறிக்கையினை 18.11.2019 ல் சரக துணை பதிவாளரிடம் கொடுத்துவிட்டேன். விசாரணை அறிக்கையினை தட்டச்சு பிழை இருப்பதாக கூறி எனக்கு தபால் வைத்தார்கள். நான் விசாரணை அறிக்கையில் உள்ள பிழையை சரிசெய்து 20.06.2020 அன்று மீள துணை பதிவாளருக்கு அனுப்பிவிட்டேன். மேற்படி Z764 வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்க செயலாளர் அன்றைய தேதியில் பொறுப்பு வகித்த சங்க எழுத்தர் ஆஜர் எதிரி கவிதாவுக்கு எதிராக திருவாரூர் வணிக குற்றப்பிரிவு போலிசாரிடம் புகார் அளிக்கப்பட்டு அந்த புகாரின் அடிப்படையில் என்னை விசாரணை செய்தார்கள். நான் நடந்த விவரம் சொன்னேன்.

**எதிரிதரப்பு குறுக்குவிசாரணை** எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2025.08.04 18:07:17 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.